TNKK150015952023

**உதவி அமர்வு நீதிமன்றம், இரணியல்**
**முன்னிலை– திரு. R. ஆர். காரல் மார்க்ஸ், பி.எல்.,**
**உதவி அமர்வு நீதிபதி, இரணியல்**

**2026 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 7 ம் நாள் செவ்வாய்கிழமை**

**அமர்வு வழக்கு எண். 289/2023**
**முதல் விசாரணை வழக்கு எண்.125/2022**
**CNR. No. TNKK15-001595-2023**

(நீதித்துறை நடுவர் நீதிமன்றம், இரணியல் )

| | | |
|---|---|---|
| தமிழக அரசுக்காக | : | கருங்கல் காவல் நிலையம்,<br>காவல் நிலைய குற்ற எண்.134/2022 |
| எதிரியின் பெயர் | : | திரு. கார்த்திகேயன்,<br>த/பெ. சங்கரபாண்டி (எ) மணிகண்டன்<br>நடுபிடாகை,<br>மிடாலக்காடு,<br>பாலபள்ளம் (அஞ்சல்). |
| அரசு தரப்பில் எதிரி மீது முறையிடப்பட்ட குற்றச்சாட்டுக்கள் | : | தமிழ்நாடு பொது சொத்துக்கள் (சேதாரம் மற்றும் இழப்பு தடுப்பு) சட்டம் பிரிவு 3(1) மற்றும் இ.த.ச பிரிவுகள் 294(பி) மற்றும் 353. |
| எதிரி மீது வனையப்பட்ட குற்றச்சாட்டுக்கள் | | தமிழ்நாடு பொது சொத்துக்கள் (சேதாரம் மற்றும் இழப்பு தடுப்பு) சட்டம் பிரிவு 3(1) மற்றும் இ.த.ச பிரிவுகள் 294(பி) மற்றும் 352, |
| நீதிபதியின் முடிவு | : | தமிழ்நாடு பொது சொத்துக்கள் (சேதாரம் மற்றும் இழப்பு தடுப்பு) சட்டம் பிரிவு 3(1) மற்றும் இ.த.ச பிரிவுகள் 294(பி) மற்றும் 352–ன் படி குற்றவாளி இல்லை என தீர்மானிக்கப்படுகிறது. |

நீதிமன்றத்தின் தீர்ப்பு : முடிவில், எதிரி, தமிழ்நாடு பொது சொத்துக்கள் (சேதாரம் மற்றும் இழப்பு தடுப்பு) சட்டம் பிரிவு 3(1) மற்றும் இ.த.ச பிரிவுகள் 294(பி) மற்றும் 352–ன் கீழ் குற்றவாளி அல்ல என முடிவு செய்து, மேற்படி குற்றச்சாட்டுகளிலிருந்து கு.வி.மு.ச.235(1) பிரிவின் படி விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது. வழக்கு சொத்து ஏதும் உத்தரவிற்கில்லை. இவ்வழக்கில் எதிரி முன் ஜாமீன் அடிப்படையில் எழுதிக்கொடுத்த பிணை பத்திரம் ரத்து செய்யப்படுகிறது.

இவ்வழக்கு என் முன் விசாரணைக்காக 30.06.2026 ம் தேதியன்று வந்த போது அரசு தரப்பில் அரசு கூடுதல் வழக்குரைஞர் திரு.அசன் கமல் E.அப்பாஜி அவர்கள் முன்னிலையாகியும், எதிரி தரப்பில் வழக்கறிஞர் திரு.T.சிவகுமார் அவர்கள் முன்னிலையாகியும், இரு தரப்பு வாதுரைகளைக் கேட்டும், தொடர்புடைய சாட்சியங்களை பரிசீலனை செய்தும், இன்றுவரை என் ஆய்வில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கலான

## Case Summary

| | | |
|---|---|---|
| i. | The period of remand of the accused : | Accused not Remanded. Anticipatory bail granted by the Hon’ble Principal Session Judge, Kanniyakuamri @ Nagercoil, dated 03.08.2023. |
| ii. | The date of filing of the complaint/final report in the court : | 23.11.2022 |
| iii. | The date of committal of the case to the Court of Sessions : | 07.09.2023 |
| iv. | The date of questioning of the accused under Sections 228, 240, 246 and 251 of the Code of CriminalProcedure, 1973, as the case may be ; | 12.12.2023 |

| | | | | |
|---|---|---|---|---|
| v. | Filing of all miscellaneous petitions and their results including the results on challenge before superior Courts : except routine petitions like under Section 317 of the Code : | U/S. 72(2) BNSS Petition allowed. | | |
| vi. | Date of examination in-chief and cross-examination of a witness : | Witness | Chief Examination | Cross Examination |
| | | PW1 | 25.11.2025 | 25.11.2025 |
| | | PW2 | 25.11.2025 | 25.11.2025 |
| | | PW3 | 02.12.2025 | 02.12.2025 |
| | | PW4 | 02.12.2025 | 02.12.2025 |
| | | PW5 | 27.01.2026 | 27.01.2026 |
| | | PW6 | 17.02.2026 | 17.02.2026 |
| | | PW7 | 03.03.2026 | 03.03.2026 |
| | | PW8 | 23.06.2026 | 23.06.2026 |
| vii. | Date of examination of the accused under Section 313 of the code : | 24.06.2026 | | |
| viii | Details of abscondence of an accused and his appearance/production, as the case may be : and | Accused abscond on 08.07.2025 to 22.07.2025 | | |
| ix | Grant of stay by superior Courts and the results thereof. | - | | |

**<u>தீர்ப்புரை</u>**

கடந்த 26.04.2022ம் தேதி இரவு 10.00 மணியளவில் எதிரியின் தகப்பனாரான திரு. சங்கரபாண்டி (எ) மணிகண்டன் என்பவர் தனது மகனாகிய எதிரி திரு.கார்த்திகேயன், தனது வீட்டின் பொருட்களை உடைப்பதாக காவல் கட்டுப்பாட்டு அறைக்கு தகவல் கொடுத்ததின் பேரில், சம்பவ இடத்திற்கு இரவு ரோந்து பணியில் இருந்த 1வது சாட்சி அஜித்குமார், அரசு வாகனமான TN 74 G 0529 என்ற பதிவெண் கொண்ட வாகனத்தில் ஆய்வாளருடன் சென்று சம்பவ

இடத்தில் வாகனத்தை நிறுத்தி வைத்து கொண்டு இருந்தபோது, 27.04.2022 ம் தேதி அதிகாலை 00.30 மணியளவில் எதிரி கையில் அருவாளுடன் வந்து ரூ.15,200/- மதிப்பிலான அரசு வாகனத்தின் கண்ணாடிகளை உடைத்து அரசிற்கு ரூ.15,200/- இழப்பு ஏற்படுத்தியதால் எதிரி, தமிழ்நாடு பொது சொத்துக்கள் (சேதாரம் மற்றும் இழப்பு தடுப்பு) சட்டம் பிரிவு 3(1), சாட்சி 1 அஜித் குமாரைப்பார்த்து "தேவுடியா மவனே, பிண்டாமோனே" என்று கெட்ட வார்த்தையால் பொது இடத்தில் வைத்து அருவருப்பு ஏற்படும் வகையில் பேசியதாகவும், மற்றும் சாட்சி 1 அஜித்குமார் அரசு அலுவலர் என்ற முறையில் அவரது கடமையை செய்யவிடாமல் தடுத்ததாகவும் எதிரி மீது 3(1) TNP (PD&L) Act 1992 மற்றும் இ.த.ச பிரிவுகள் 294(பி) மற்றும் 353 ன் படி குற்றம் புரிந்ததாக கருங்கல் காவல் நிலைய ஆய்வாளர் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2. இரணியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் இந்த வழக்கு கோப்புக்கு எடுக்கப்பட்டு, 207 கு.வி.மு.ச.பிரிவின் கீழ் வழக்கு ஆவணங்களின் நகல்கள் எதிரிக்கு வழங்கப்பட்டுள்ளன. இவ்வழக்கில் அந்நீதிமன்றம் ஆவணங்களைப் பரிசீலனை செய்தபோது, எதிரியின் குற்றச் செய்கை அமர்வு நீதிமன்றத்தால் மட்டுமே பரிசீலனை செய்யத்தக்கது எனக் கண்டு, வழக்கு கோப்பானது நாகர்கோவில் உள்ள கன்னியாகுமரி முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றத்திற்கு கு.வி.மு.ச.209(அ) படி சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

3. நாகர்கோவில் உள்ள கன்னியாகுமரி முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றம் கோப்புக்கு எடுத்துக் கொண்டு, இவ்வழக்கை பின்னர் விசாரணைக்காக இந்நீதிமன்றத்திற்கு மாற்றம் செய்ய உத்தரவிட்டுள்ளது. அவ்வாறு கிடைக்கப் பெற்ற இவ்வழக்கில், இந்நீதிமன்றத்தில் இருதரப்பும் கேட்கப்பட்டு, ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டபோது, வழக்கு எதிரி குற்றம் புரிந்துள்ளார் என்று அனுமானிக்க போதிய காரணங்கள் இருப்பதாக தெரிய வரவே எதிரிமீது தமிழ்நாடு பொதுசொத்துக்கள் (சேதாரம் மற்றும் இழப்பு தடுப்பு) சட்டம் பிரிவு 3(1), பிரிவுகள் 294(பி) மற்றும் 352 இ.த.ச– படி குற்றச்சாட்டுகள் வனைந்து, 2023–ம் ஆண்டு டிசம்பர் மாதம் 12ம் நாள் வினவப்பட்டபோது எதிரி மேற்படி குற்றச்சாட்டுக்களை மறுத்து தான் குற்றவாளி இல்லை எனக் கூறியுள்ளார்,

4. எதிரி மீதான குற்றச்சாட்டை நிரூபிக்க அரசு தரப்பில் அ.சா.1 முதல் 8 சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, அ.சா.ஆ.1 முதல் 8 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. சான்று பொருள் ஏதும் குறியீடு செய்யப்படவில்லை.

5. <u>அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து தெரியவரும் அரசு தரப்பு வழக்கின் சுருக்கம் பின்வருமாறு</u>

அ.சா.1 திரு. அஜித்குமார் தக்கலை காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறார். கடந்த 25.04.2022 அன்று கருங்கல் காவல் நிலையத்தில் ஆய்வாளருக்கு ஓட்டுநராக மிடாலக்காடு, பாலப்பள்ளம் அருகே ரோந்து பணியில் இருந்தபோது, இரவு 10 மணியளவில் ஆய்வாளருக்கு

போன்மூலம் காவல் நிலையத்தில் இருந்து திரு. சங்கரபாண்டி என்ற மணிகண்டனின் மகன் கார்த்திகேயன் பக்கத்து வீட்டில் உள்ள பொருட்களை அடித்து உடைத்துக்கொண்டு இருப்பதாக தகவல் வந்ததன் அடிப்படையில், உதவி ஆய்வாளர் திரு,மகேஷ் அவர்களை அழைத்துக்கொண்டு 26.04.2022 அன்று அதிகாலை 12.30 மணியளவில் சம்பவ இடம் சென்றுள்ளார். அப்போது எதிரி வீட்டின் முன்பு போலீஸ் வாகன எண் TN 74 G 0529 டாட்டா சுமோவினை நிறுத்தி, காவல் ஆய்வாளர், எதிரியின் அப்பா சங்கரபாண்டி என்ற மணிகண்டனை விசாரித்து கொண்டிருக்கும்போது, எதிரி அருவாளை எடுத்துக்கொண்டு வந்து வண்டியை ஏன் இங்கு நிறுத்தி இருக்கிறாய் என்று கேட்டு வண்டியில் முன் பக்க கண்ணாடி, Front glass, right side door glass, பின்இருக்கையின் வலது பக்கத்தில் உள்ள சிறிய கண்ணாடி மற்றும் வண்டியின் பின்பக்க கண்ணாடி ஆகியவற்றை கெட்ட வார்த்தை பேசிகொண்டு உடைத்துள்ளார். பக்கத்தில் இருப்பவர்கள் வந்து சத்தம் போட்டதும், எதிரி சம்பவ இடத்தில் இருந்து ஓடி உள்ளார். இது சம்பந்தமாக அ.சா.1 காலை 8 மணிக்கு ஆய்வாளர் திரு.ஜெயசந்திரனிடம் புகார் மனு அ.சா.ஆ–1 கொடுத்துள்ளார்.

6. அ.சா.2 திரு.மகேஷ் தற்போது கன்னியாகுமரி மாவட்ட தனிபிரிவு குற்ற புலனாய்வு துறையில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறார். 25.04.2022 அன்று கருங்கல் காவல் நிலைய உதவி ஆய்வாளராக இரவு ரோந்து பணியில் இருந்தபோது, பாலபள்ளம் நடுபிடாகை, சங்கரபாண்டி என்ற மணிகண்டன் மகன் கார்த்திகேயன் என்பவர் வீட்டில் உள்ள பொருட்களையும், பக்கத்து வீடுகளில்

உள்ள பொருட்களையும் உடைத்ததாக அன்று சப்டிவிசன் இரவு ரோந்து பணியில் இருந்த கருங்கல் ஆய்வாளர் அவர்களுக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில், கருங்கல் ஆய்வாளர் அவர்களுடன் 26.04.2022 அன்று அதிகாலை 00.30 மணிக்கு சங்கரபாண்டியன் வீட்டிற்கு சென்றுள்ளார். ஆய்வாளர் எதிரியின் தகப்பனார் திரு.சங்கர பாண்டியிடம் நடந்த சம்பவம் குறித்து விசாரித்துக் கொண்டிருக்கும்போது, எதிரி கையில் அருவாளுடன் சங்கரபாண்டியின் வீட்டின் முன்பு நிறுத்தியிருந்த TN 74 G 0529 பதிவெண்கொண்ட டாடா சுமோ காரின் முன்பக்க கண்ணாடி, வலது பக்க கண்ணாடி, வலது பக்க சிறிய கண்ணாடி மற்றும் பின் பக்க கண்ணாடியை அருவாளால் வெட்டி உடைத்துள்ளார். வாகன ஓட்டுநர் அஜித் குமார் இது சம்பந்தமாக எதிரியிடம் கேட்டபோது, அவரை கெட்ட வார்த்தை பேசி மிரட்டி உள்ளார். அருகில் உள்ளவர்கள் ஓடிவரவும், எதிரி அங்கிருந்து சென்றுள்ளார்.

7. அ.சா.3 திரு.மோகன் சந்திரகுமார் பாலபள்ளத்தில் வசித்து வியாபாரம் செய்துவருகிறார். பார்வை மகஜர் அ.சா.ஆ.2 ல் கையொப்பம் போட்டுக்கொடுத்துள்ளார். சாட்சி திரு.முருகேசன் என்பவரை அ.சா.3 க்கு தெரியும். வழக்கு சம்பவம் பற்றி அவருக்கு எதுவும் தெரியாது. போலீசார் விசாரிக்கவில்லை என்றும் கூறி பிறழ்சாட்சியாகி உள்ளார்.

8. அ.சா.4 திரு. முருகேசன் பாலபள்ளத்தில் வசித்து, கொத்தனார் வேலை செய்துவருகிறார். காவல் நிலையத்திற்கு சென்றபோது வெள்ளை பேப்பரில் கையொப்பம் வாங்கினார்கள் என்றும், சாட்சி திரு.மோகன் சந்திரகுமார்

என்பவரை தனக்கு தெரியும் என்றும், பார்வை மகஜரில் உள்ள 2வது கையொப்பம் அ.சா.ஆ–3 தன்னுடையது என்றும் கூறி பிறழ்சாட்சியாகி உள்ளார்.

9. அ.சா.5 திரு. சிபி செபாஷ்டியன் கருங்கலில் கண்ணாடி கடை வைத்திருக்கிறார். கருங்கல் போலீசார் வந்து கார் கண்ணாடிக்கான பில்லை கேட்டபோது, பில்லை கொடுத்தேன் என்றும் வேறு விபரங்கள் நினைவில் இல்லை என்றும் கூறி கூறி பிறழ்சாட்சியாகி உள்ளார்.

10. அ.சா.6 திருமதி. சசி, தஞ்சாவூர் செயலாக்க பிரிவில் (Enforcement wing) வட்டார போக்குவரத்து அலுவலராக பணியில் இருப்பதாகவும், கடந்த 26.04.2022 தேதியில் மார்த்தாண்டம் வட்டார போக்குவரத்து அலுவலராக பணியில் இருந்த போது, கருங்கல் காவல் நிலைய ஆய்வாளர் கு.எண். 134/2022 ன் படி TN 74 G 529 என்ற பதிவு எண் கொண்ட டாடா சுமோ கார் வாகனத்தினை அலுவலகத்தில் வைத்து ஆய்வு செய்தபோது, வாகனத்தின் முன் மற்றும் பின் காற்றுத்தடை கண்ணாடி துகள்களாக உடைந்திருந்தது. வலது பக்க ஜன்னல் கண்ணாடி துகள்களாக உடைந்திருந்தது என்று அறிக்கை அ.சா.ஆ.4 அளித்ததாகவும் காவல் ஆய்வாளர் விசாரித்தார் என்றும் கூறியுள்ளார்.

11. அ.சா.7 ஓய்வுப்பெற்ற காவல் உதவி ஆய்வாளர் திரு. சோபனராஜ், 26.04.2022ம் தேதி கருங்கல் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியில் இருக்கும் போது கருங்கல் காவல் நிலைய தலைமைக் காவலர் 2899 அஜித் குமார் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று, புகார் மனுவின் தன்மை படி கருங்கல் காவல் நிலைய குற்ற எண்.184/2022 இ.த.ச.

பிரிவுகள் 294(b), 353 மற்றும் 3(1) TNPPDL Actன் கீழ் வழக்கு பதிவு செய்துள்ளார். அ.சா.ஆ.5 முதல் தகவல் அறிக்கையின் அசலினை இரணியல் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தும், இதர நகல்களை மேல் அதிகாரிகளுக்கு அனுப்பி உள்ளார். ஒரு நகலை ஆய்வாளர் ஜெயச்சந்திரன் அவர்களின் பார்வைக்கு வைத்துள்ளார்.

12. அ.சா.8 கன்னியாகுமரி உட்கோட்ட காவல் துணை கண்காணிப்பாளர், திரு.ஜெயச்சந்திரன்/இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரி, 26.04.2022ம் தேதி கருங்கல் காவல் ஆய்வாளராக பணியில் இருந்த போது, கருங்கல் காவல் உதவி ஆய்வாளர் திரு.சோபன ராஜ், கருங்கல் காவல் நிலைய குற்ற எண்.134/2022, சட்ட பிரிவுகள் 294(b), 353 இ.த.ச. பிரிவு 3(1) TNPPDL Act வழக்கு பதிவு செய்து விசாரணைக்கு வைத்ததை பெற்றுக் கொண்டு அன்றைய தினம் காலை 9.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் மோகன் சந்திர குமார் மற்றும் முருகேசன் ஆகியோர் முன்பாக சம்பவ இடத்தை பார்வையிட்டு, பார்வை மகஜர் அ.சா.ஆ.6 மற்றும் வரைபடம் அ.சா.ஆ.7 தயார் செய்துள்ளார். பின்பு சாட்சிகள் அஜித் குமார், உதவி ஆய்வாளர் மகேஷ், சோபன ராஜ் பார்வை மகஜர் சாட்சிகள் மோகன் சந்திர குமார் மற்றும் முருகேசன் ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். வழக்கில் சேதமடைந்த அரசு வாகனம் TN 74 G 0529 sumo வாகனத்தை மார்த்தாண்டம் வட்டார போக்குவரத்து ஆய்வாளர் அவர்கள் ஆய்வுக்கு உட்படுத்தி ஆய்வு அறிக்கை சான்று பெற்றுள்ளார். மோட்டார் வாகன ஆய்வாளர் சசி அவர்களை விசாரித்து

வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்பு சேதமடைந்த கண்ணாடியை சரி செய்ய கருங்கல் அஜிதா கிளாஸ் Work shop ல் கண்ணாடியை மாற்றம் செய்து சேதமதிப்பு ரசீது பெற்று ரவி செபஸ்டின் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். அந்த ரசீது அ.சா.ஆ.8. பின்பு 06.11.2022 அன்று புலன் விசாரணை முடித்து எதிரி கார்த்திகேயன் என்பவர் மீது இந்திய தண்டனை சட்டப்பிரிவுகள் 294 பி, 353 மற்றும் 3(1) TNPPDL Act –ன் கீழ் எதிரி மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

13. இவ்வழக்கில் தீர்வுக்குரிய பிரச்சனை என்பது அரசு தரப்பில் எதிரி மீது இ.த.ச பிரிவுகள் 294 பி, 353 மற்றும் 3(1) TNPPDL Act –ன் மற்றும் தமிழ்நாடு பொது சொத்துக்கள் (சேதாரம் மற்றும் இழப்பு தடுப்பு) சட்டம் பிரிவு 3(1)ன் படி சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதேயாகும்.

<u>தீர்வு</u>

14. அரசு தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் தன்னுடைய வாதத்தின் போது, எதிரி மீது இ.த.ச பிரிவுகள் 294(பி), 352 மற்றும் தமிழ்நாடு பொது சொத்துக்கள் ( சேதாரம் மற்றும் இழப்பு தடுப்பு) சட்டம் பிரிவு 3(1)ன் படி குற்றச்சாட்டுகள் அரசு தரப்பு சாட்சியங்கள் மற்றும் ஆவணங்கள் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளதாகவும், எதிரிக்கு தகுந்த தண்டனை வழங்க வேண்டும் என்றும் வாதிட்டார்.

15. எதிரி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தின் போது, எதிரி மீதான குற்றச்சாட்டுகள் எதுவும் அரசு தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி

நிரூபிக்கப்படவில்லை என்றும் எனவே எதிரியை விடுதலை செய்ய வேண்டும் என்றும் வாதிட்டார்.

16. இருதரப்பு வாதங்கள், வழக்கு ஆவணங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன.

17. இந்த வழக்கில் அரசு தரப்பில் 26.04.2022ம் தேதி இரவு 10.00 மணியளவில் 1வது சாட்சி அஜித்குமார், அரசு வாகனமான TN 74 G 0529 ல் ஆய்வாளருடன், ஆய்வாளருக்கு ஓட்டுநராக மிடாலக்காடு, பாலப்பள்ளம் அருகே ரோந்து பணியின்போது வாகனத்தை நிறுத்தி வைத்து கொண்டிருக்கையில் 27.04.2022ம் தேதி அதிகாலை 00.30 மணியளவில் எதிரி கையில் அருவாளுடன் வந்து ரூ.15,200/- மதிப்பிலான அரசு வாகனத்தின் கண்ணாடிகளை உடைத்து சேதப்படுத்தியதாக தமிழ்நாடு பொது சொத்துக்கள் (சேதாரம் மற்றும் இழப்பு தடுப்பு) சட்டம் பிரிவு 3(1) ன் கீழும், எதிரியை தடுக்க வந்தவர்களை பார்த் கெட்ட வார்த்தையால் பொது இடத்தில் அருவருப்பு ஏற்படும் வகையில் பேசியதாக இ.த.ச. பிரிவு 294(பி)ன் கீழும், பணியில் ஈடுபட்டிருந்த அரசு அலுவலர்களை அவர்களது கடமையை செய்யவிடாமல் தடுத்ததாக எதிரி மீது இ.த.ச.பிரிவு 352ன் கீழும் தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்துள்ளதாக குற்றச்சாட்டுகள் முன் வைக்கப்பட்டுள்ளது.

18. அரசு தரப்பு வழக்கை நிரூபிக்க புகார்தாரர்/அ.சா.1, கருங்கல் காவல் நிலைய உதவி ஆய்வாளர்/அ.சா.2, பார்வை மகஜரில் முதல் கையொப்பம் போட்டவர்/அ.சா.3, பார்வை மகஜரில் 2வது கையொப்பம் போட்டவர்/அ.சா.4,

வழக்கு சம்பவத்தின் போது சேதப்படுத்தப்பட்டுள்ள வாகனத்தை பழுது பார்த்த தொகைக்கான ரசீது வழங்கியவர்/அ.சா.5, வட்டார போக்குவரத்து அலுவலர்/ அ.சா.6, சம்பவம் நடந்த சமயத்தில் இவ்வழக்கு சம்பவத்தை இருந்த விசாராணை செய்த உதவி ஆய்வாளர் மற்றும் புலன் விசாரணை அதிகாரி/ அ.சா.7 மற்றும் 8 ஆகியோர்கள் நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டுள்ளனர். அரசு தரப்பு சான்றாவணங்களாக அ.சா.1 முதல் 8 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. சான்று பொருட்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை,

19. இவ்வழக்கில் பார்வை மகஜரில் முதலாவது கையொப்பம் செய்த அ.சா.3 திரு. மோகன் சந்திரகுமார் வழக்கு சம்பவம் பற்றி தனக்கு எதுவும் தெரியாது என்றும், போலீசார் தன்னை விசாரிக்கவில்லை என்றும், அ.சா.4 திரு.முருகேசன் என்பவரும், காவல்நிலையம் சென்றபோது வெள்ளை பேப்பரில் கையொப்பம் வாங்கினார்கள். பார்வை மகஜரில் 2வது கையொப்பம் செய்ததாகவும், அ.சா.5 திரு.சிபி செபாஷ்டியான் என்பவரும் கார் கண்ணாடிக்கான பில்லை கேட்டார்கள் பில்லை கொடுத்தேன். வேறு விபரங்கள் ஒன்றும் நினைவில் இல்லை என்று கூறியும் அ.சா.3, 4 மற்றும் 5 ஆகிய சாட்சிகள் பிறழ்சாட்சியாகி உள்ளனர்.

20. இந்த வழக்கின் புகார்தாரரான அ.சா1, கடந்த 25-04-2022 அன்று, கருங்கல் காவல் நிலையத்தில், ஆய்வாளருடன் இரவு ரோந்து பணியில் இருந்தபோது, சுமார் 10 மணிக்கு, ஆய்வாளருக்கு (Phone) தொலைபேசி மூலம்

சங்கரபாண்டி என்ற மணிகண்டனின் மகன் கார்த்திகேயன், பக்கத்து வீட்டில் உள்ள பொருட்களை அடித்து உடைத்துக் கொண்டு இருப்பதாக காவல் நிலையத்தில் இருந்து வந்த தகவலின் அடிப்படையில், உதவி ஆய்வாளர் திரு. மகேஷ் அவர்களை அழைத்துக் கொண்டு, அதிகாலை 12.30 மணி அளவில் சம்பவ இடம் சென்று, ஆஜர் எதிரியின் வீட்டின்முன் நின்ற போலீஸ் வாகன எண் TN 74 G 0529 வாகனத்தை நிறுத்தி, காவல் ஆய்வாளர் வண்டியில் இருந்து இறங்கி, ஆஜர் எதிரியின் தகப்பனாரை விசாரித்துக் கொண்டு இருக்கும் போது, ஆஜர் எதிரி, அருவாளை எடுத்துக் கொண்டு வந்து, வண்டியை ஏன் நிறுத்துகிறாய் என்று கேட்டு, வண்டியின் முன் பக்கம் கண்ணாடியை உடைத்தார். அதே போல், பின் பக்க கண்ணாடி, வலது பக்க கதவு கண்ணாடி, பின் இருக்கையின் வலது பக்கக்கில் உள்ள சிறிய கண்ணாடி மற்றும் பின் பக்க கண்ணாடி ஆகியவற்றை உடைத்து, கெட்ட வார்த்தை பேசிக் கொண்டு, அருகில் உள்ளவர்கள் சத்தம் போட்டதும், எதிரி சம்பவ இடத்தில் இருந்து ஓடி விட்டார் என்றும், அதற்காக காலை 8.00 மணிக்கு ஆய்வாளரிடம் புகார் கொடுத்ததாக சாட்சியம் அளித்து இருக்கிறார். அவர் கொடுத்த புகார் அரசு தரப்பு சான்றாவணம் 1 ஆக குறியீடு செய்யப்பட்டிருக்கிறது, அந்தப் புகாரை பார்க்கும் பொழுது சங்கர பாண்டியன் (எ) மணிகண்டனின் மகன் அவரது வீட்டிலும், அருகில் உள்ள வீடுகளிலும் உள்ள பொருட்களை, அடித்து, உடைத்து, பிரச்சினை செய்தது தொடர்பாக, சங்கரபாண்டியன் என்பவர் காவல் நிலையத்திற்கு போன் மூலம் தகவல் தெரிவித்து, அ.சா.1, காவல் ஆய்வாளர்

மற்றும் உதவி ஆய்வாளர் திரு.மகேஷ் சம்பவ இடத்திற்கு 26-04-2022 அன்று காலை 12.30 மணிக்கு சென்று, வாகனத்தை நிறுத்தி ஆய்வாளர், சங்கரபாண்டியனின் வீட்டிற்கு சென்று விசாரித்துக் கொண்டு இருந்த போது, எதிரி கார்த்திகேயன் கையில் அருவாளுடன் வந்து, காவல் வாகனத்தில் இருந்த முன் பக்க கண்ணாடி, பின் பக்க கண்ணாடி, கதவில் உள்ள கண்ணாடி மற்றும் பின்பக்க Side ல் உள்ள கண்ணாடிகளை, அருவாளால் வெட்டி உடைத்து, அதை கேட்டதற்கு, கெட்ட வார்த்தைகள் பேசி, அப்போது அந்த தெருவில் உள்ளவர்கள் சத்தம் போட்டதால், அருவாருடன் சென்று விட்டார் என்று புகார் கொடுத்திருக்கிறார். அந்த புகாரை ஒத்துதான் அ.சா.1 சாட்சியம் அளித்து இருக்கிறாரா என்று பார்க்கும் பொழுது, எதிரி, அருவாளை எடுத்துக் கொண்டு வந்து, வண்டியை ஏன் இங்கு நிறுத்தியிருக்கிறாய் என்று கேட்டு, கண்ணாடிகளை உடைத்துள்ளதாக முதல் விசாரணையில் சாட்சியம் அளித்திருக்கிறார். தன்னுடைய குறுக்கு விசாரணையில், வாகன ஓட்டுநர் என்பதால் ஆய்வாளர் ரோந்து பணியில் இருக்கும்போது வண்டியை ஓட்டியதாகவும், தானும், ஆய்வாளரும், காவல் வாகனத்தில் சென்றோம் என்றும், சாட்சியம் அறிக்கிருக்கிறார்.

21. மேலும் உதவி ஆய்வாளர் தகவலை சொல்லியதால், அந்த இடத்திற்கு வந்தார் என்றும் சாட்சியம் அளித்திருக்கிறார். அ.சா.1 தனது குறுக்கு விசாரணையில், தான் ஆஜர் எதிரியின் வீட்டிற்கு செல்லவில்லை, வாகனத்தில் இருந்து இறங்கி அங்கேயே நின்றுக்கொண்டேன், எதிரியின் வீட்டிற்கு

ஆய்வாளர் மற்றும் உதவி ஆய்வாளர் சென்றார்கள் என்றும் சாட்சியம் அளித்திருக்கிறார்.

22. மேற்படி அரசுதரப்பு முதலாவது சாட்சியத்திலிருந்து, தானும், ஆய்வாளரும் சம்பவ இடத்திற்கு 26.04.2022 அன்று அதிகாலை 12.30 சங்கரபாண்டி (எ) மணிகண்டனின் வீட்டிற்கு அருகே Tata Sumo TN 74 G 0529 என்ற வாகனத்தில் சென்றதாகவும், உதவி ஆய்வாளருக்கு தகவல் கொடுத்ததன் அடிப்படையில், அவர் தனியாக அந்த இடத்திற்கு வந்ததாகவும், அப்போது, அ.சா.1 வாகனத்தின் அருகே இறங்கி நிற்கும்போது, ஆய்வாளரும், உதவி ஆய்வாளரும் சங்கரபாண்டியனின் வீட்டிற்கு விசாரணைக்கு சென்றபோது, எதிரி அருவாளுடன் வந்து, இங்கு எதற்காக வண்டியை நிறுத்தியிருக்கிறாய் என்று கேட்டு, வாகனத்தின் முன் பக்கம், பின் பக்கம் மற்றும் வலது புற பக்க கதவு கண்ணாடிகளை உடைத்ததாக காட்சியம் அளித்திருக்கிறார்.

23. சம்பவ இடத்திற்கு வந்ததாக கூறியிருக்கின்ற திரு. மகேஷ், உதவி ஆய்வாளர், அரசு தரப்பு 2வது சாட்சியாக விசாரிக்கப்பட்டதில், அவர் சம்பவ இடத்திற்கு, ஆய்வாளர் அவர்களுடன் கடந்த 26-04-2022 அன்று, அதிகாலை 3.00 மணிக்கு சங்கர பாண்டியன் (எ) மணிகண்டன் வீட்டிற்கு சென்றதாகவும், ஆய்வாளர் சங்கர பாண்டியனுடன் விசாரித்துக் கொண்டிருந்த போது, எதிரி கையில் அருவாளுடன், சங்கர பாண்டியன் வீட்டின் முன்பு நின்றிருந்த Tata Sumo TN 74 G 0529 பதிவெண் கொண்ட வாகனத்தின் கண்ணாடிகளை வெட்டி உடைத்தார் என்றும், அதனைக் கேட்ட அ.சா-1ஐ, கெட்ட

வார்த்தைகளால் பேசி, மிரட்டிக்கொண்டே அங்கிருந்து ஓடிவிட்டார் என்றும், சாட்சியமளித்திருக்கிறார். மேலும், தனது குறுக்கு விசாரணையில், தான், தன்னுடைய இரு சக்கர வாகனத்தில் சம்பவ இடத்திற்கு சென்றதாகவும், தானும், ஆய்வாளரும் ஒரே நேரத்தில் தான் சம்பவ இடத்திற்கு சென்றதாகவும், ஆய்வாளர் மட்டும் தான் எதிரியின் வீட்டிற்கு போனார் என்றும், தான் டாடா சுமோ வாகனத்திற்கு பக்கத்தில் இருந்ததாகவும், அ.சா.1 வண்டியின் அருகில் நின்றுக் கொண்டிருந்ததாகவும் சாட்சியம் அளித்திருக்கிறார். அப்போது எதிரி வாகனத்தை அடித்து உடைத்த போது, தானும், வாகனத்தின் அருகில் இருந்தேன் என்றும் சாட்சியம் அளித்திருக்கிறார். அதன்பிறகு எதிரி வாகனத்தை அடித்துவிட்டு சென்றபிறகு அ.சா.1 ஆய்வாளர் காவல் நிலையத்திற்கு போய்விட்டதாகவும் சாட்சியம் அளித்திருக்கிறார்.

24. அரசு தரப்பு இரண்டாவது சாட்சியின் சாட்சியத்திலிருந்து, சம்பவ இடத்திற்கு, அதிகாலை 12.30 மணிக்கு தான், தனது இரு சக்கர வாகனத்தில் சென்று, ஆய்வாளருடன் எதிரியின் வீட்டிற்கு சென்று விசாரித்தபோது, தானும், அ.சா.1ம், வாகனத்தின் அருகே சென்றதாகவும், அப்போது ஆஜர் எதிரி அருவாளுடன் வந்து வாகனத்தை அடித்து உடைத்ததாகவும் சாட்சியம் அளித்திருக்கிறார்.

25. அரசு தரப்பு சாட்சியமான 6வது சாட்சி, வாகனத்தை ஆய்வு செய்த வாகன ஆய்வாளர், தான் 26-04-2022, அன்று மார்த்தாண்டம். வட்டார போக்கு வரத்து அலுவலராக இருந்த போது, குற்ற எண் 134/2022 தொடர்புடைய TN 74

G 0529 என்ற புதிவெண் கொண்ட வாகனத்தை ஆய்வு செய்ததில் வாகனத்தின் முன் காற்றுத்தடை கண்ணாடிகள் துகள்களாக உடைந்து இருந்தது என்றும், வலது பக்க ஜன்னல் கண்ணாடி துகள்களாக உடைந்து இருந்தது என்றும் சாட்சியம் அளித்திருக்கிறார்.

26, அரசு தரப்பு சாட்சியமான 7 வது சாட்சி, தனது சாட்சியத்தில், கடந்த 26.04.2022 ம் தேதி தான் ஆய்வாளராக கருங்கல் காவல் நிலையத்தில் பணியில் இருக்கும்போது, அ.சா.1 நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரை பெற்று குற்ற எண் 134/2022 ன் கீழ் இ.த.ச. பிரிவுகள் 294 (6), 353 3(1) TNPPDL Act–ன் கீழ் வழக்கு பதிவு செய்து, நகல்களை உரிய ஆய்வாளருக்கு அனுப்பி வைத்ததாக சாட்சியம் அளித்திருக்கிறார். தன்னுடைய குறுக்கு விசாரணையில் சம்பவம் தொடர்பாக, தனிப்பட்ட நபர்கள் யாரும் புகார் கொடுக்கவில்லை என்றும் சாட்சியம் அளித்திருக்கிறார்.

27. இறுதியாக விசாரணை அலுவலர் அ.சா.8, சாட்சியம் அளித்திருக்கிறார். அவருடைய சாட்சியத்தில் முதல் தகவல் அறிக்கையைப் பெற்று, சம்பவ இடம் சென்று சாட்சிகளை விசாரித்து பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயார் செய்ததாகவும், அந்த பார்வை மகஜர் மற்றும் வரைபடம் அ.சா.6 மற்றும் அ.சா.7 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அதன் பிறகு, வழக்கை விசாரணை செய்து இறுதி அறிக்கை தாக்கல் செய்ததாகவும். அறிக்கை வாகன கண்ணாடியை சரி செய்வதற்கு அஜிதா கிளாஸ் பணிமனையிலிருந்து

பெறப்பட்ட ரசீதை அ.சா.8 ஆக குறியீடு செய்து செய்து தாக்கல் செய்ததாக சாட்சியம் அளித்திருக்கிறார்.

28. மேற்படி அசா.8-ன் சாட்சியத்திலிந்து கடந்த 26-04-2022 அன்று சுமார் 12.30 மணிக்கு உதவி ஆய்வாளர் அ.சா.1, மற்றும் அ.சா.8 சம்பவ இடத்திற்கு வந்து, எதிரியின் வீட்டிற்கு சென்று அ.சா.8 விசாரிக்கும்போது, எதிரி அங்கு நிறுத்தி வைக்கப்பட்டிருந்த நான்கு சக்கர வாகனத்தை அருவாள் கொண்டு உடைத்ததாக சாட்சியம் அளித்திருக்கிறார்கள். மேற்படி சாட்சியங்களிலிருந்து அ.சா.1, 2 மற்றும் 8 ஆகிய காவல் நிலைய பொறுப்பாளர்கள் இருக்கும்போது, அவர்களுடைய வாகனத்தை எதிரி உடைத்ததாக குற்றம் சாட்டப்பட்டிருக்கிறது. ஒரு நபர் வாகனத்தை உடைக்கும்பொழுது, தனிப்பட்ட நபர்கள் அருகிலிருந்தால் அதை தடுத்திருப்பார்கள். அல்லது குற்றம் செய்பவரை பிடித்திருப்பார்கள். ஆனால், காவல் நிலைய பொறுப்பாளர்களாக இருக்கும் அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகியோர்கள் முன்னிலையிலேயே வாகனத்தின் கண்ணாடியை ஒரு நபர் உடைக்கிறார் என்றால், அந்த காவல் நிலைய பொறுப்பாளர்கள், உடனடியாக சாதாரணமாக உடைத்த நபரை கைது செய்திருப்பார்கள். இந்த வழக்கில் காவல் துறையினரால் எதிரி கைது செய்யப்படவில்லை. அதற்கு அ.சா.1, 2 மற்றும் 8 வது சாட்சிகள் கூறியுள்ள காரணங்கள், எதிரி காரின் கண்ணாடியை உடைத்துவிட்டு சென்றுவிட்டார் என்று சாட்சியமளித்திருக்கிறார்கள்.

29. மேற்படி, அ.சா.1ன் சாட்சியத்தின்படி, அ.சா.1 மட்டும் தான் காரின் அருகில் இருந்ததாகவும், அ.சா.2 மற்றும் அ.சா.8, எதிரியின் வீட்டிற்கு விசாரணைக்கு சென்றதாகவும், சாட்சியமளித்திருக்கிறார். ஆனால், அ.சா.2 தன்னுடைய சாட்சியத்தில், அ.சா.8 மட்டும்தான் எதிரி வீட்டிற்கு விசாரணைக்கு சென்றதாகவும், காரின் அருகே அ.சா.1 மற்றும் 2 நின்றதாகவும் சாட்சியமளித்திருக்கிறார். மேற்படி அரசு தரப்பு 1வது சாட்சியின் கூற்றும், அரசு தரப்பு 2வது சாட்சியின் கூற்றும் வேறுபாடாக தெரிகிறது. ஒரு வேளை அரசு தரப்பு 2வது சாட்சி கூறியதுபோல், 2 காவலர்கள் வாகனத்தின் அருகில் இருந்திருந்தால், எதிரி அந்த வாகனத்தின் கண்ணாடியை உடைத்திருந்தால், உடனடியாக அவர்கள் எதிரியை பிடித்திருப்பார்கள். ஆனால், அ.சா.1 சாட்சியம் அளித்ததுபோல், அ.சா.2 வாகனத்தின் அருகில் இருந்தாரா என்பது ஒரு கேள்விக்குறியாக தான் இருக்கிறது. அதேபோல், அ.சா.1 தன்னுடைய சாட்சியத்தில், தானும், ஆய்வாளரும் டாடா சுமோ வாகனத்தில் சம்பவ இடத்திற்கு சென்றதாக சாட்சியமளித்திருக்கிறார். அரசு தரப்பு 8வது சாட்சியாக விசாரிக்கப்பட்ட ஆய்வாளர், தன்னுடைய குறுக்கு விசாரணையில் தான் சம்பவம் தொடர்பாக தகவல் வந்தபோது, கருங்கல் காவல் நிலையத்தில் இருந்ததாகவும் சாட்சியமளித்திருக்கிறார். மேலும், ஆஜர் எதிரியிடமிருந்து ஆயுதங்கள் எதுவும் கைப்பற்றப்படவில்லை என்றும் சாட்சியமளித்திருக்கிறார். இந்த வழக்கில் எதிரி கைதுசெய்யப்படவில்லை. எதிரி பயன்படுத்தியதாக கூறப்படுகின்ற ஆயுதம்

கைப்பற்றப்படவில்லை. அதற்கு விசாரணை அலுவலர் கொடுக்கின்ற காரணம் சம்பவ இடத்திற்கு சென்று எதிரியை மருத்துவமனைக்கு அவரது பெற்றோருடன் கார் பிடித்து அனுப்பி வைத்ததாகவும். சாட்சியமளித்திருக்கிறார். உண்மையாகவே எதிரி காவல் அலுவலர்களுடைய வாகனத்தை உடைத்திருந்தால், மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு ஆய்வாளர் அனுப்பியிருந்தால், அவர் கைது செய்யப்பட்டு, சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டு, மேல் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கும். ஆனால் என்ன காரணத்திற்காக, எதிரியை கைது செய்யவில்லை என்று பார்க்கும்போது, ஆய்வாளர் தன்னுடைய குறுக்கு விசாரணையில், அவர் போதை மறுவாழ்வு மையத்தில் சேர்த்ததாக எதிரியின் தகப்பனார் கூறியதாக சாட்சியமளித்திருக்கிறார். அந்த சாட்சியத்திலிருந்து ஒரு வேளை எதிரி சுயநினைவில்லாமல் குடிபோதையில் காரை உடைத்திருப்பாரா என்ற எண்ணம் வருகிறது. ஆனால் அவ்வாறு குடித்திருந்ததாக இதர அரசு தரப்பு சாட்சிகள் 1 மற்றும் 2ம் அதுபற்றி சாட்சியம் அளிக்காததால், அது ஏற்றுக்கொள்ளும் வகையில் இல்லை. வாகனத்தின் கண்ணாடியை உடைத்தவுடன் காவலர்கள் எதிரியை கைது செய்யாததும், எதிரி பயன்படுத்திய ஆயுதத்தை கைது செய்யாததும், அதேபோல் சம்பவத்தை நேரில் பார்த்த அ.சா.1, எதிரி அருவாளை எடுத்து கண்ணாடியை உடைத்ததாக சாட்சியமளித்திருப்பதை பார்க்கும்போது, எதிரி குற்றச்சம்பவத்தில் ஈடுபட்டாரா என்பது ஐயப்பாடாக இருக்கிறது.

30. மேற்படி வழக்கின் சூழ்நிலைகளை ஆராய்ந்து பார்க்கும்போது, முதலில் எதிரி மீது சுமத்தப்பட்ட இ.த.ச. பிரிவு 294 (பி), குற்றத்திற்கான உட்கூறுகளை நிரூபிக்கும் வகையில் எதிரி பொது இடங்களில் ஆபாசமான வார்த்தைகளை பேசுவது, அநாகரிகமாக பாடுவது அல்லது பிறருக்கு தொந்தரவு தரும் வகையில் செய்கைகளை செய்ததை அரசு தரப்பில் நிரூபிக்கப்பட வேண்டும். அவ்வாறு அரசு தரப்பில் சாட்டப்பட்டுள்ள, இ.த.ச. பிரிவு 294(பி)ன் படி, தேவையான உட்கூறுகளை நிரூபிக்கும் வகையில், சாட்சியங்கள் அளிக்கப்பட்டுள்ளதா என்று பார்க்கும்பொழுது, காவலர்களின் வாகனம் பொது இடத்தில் நிறுத்தி வைக்கப்பட்டதை, அ.சா.1, 2 மற்றும் 8 வது சாட்சிகள் தங்களுடைய விசாரணையில் தெளிவுப்படுத்தியிருக்கிறார்கள். ஆனால் அதே வேளையில், எதிரி அநாகரிகமாக, ஆபாசமான வார்த்தைகளை பிறருக்கு தொந்தரவு தரும் வகையில் பயன்படுத்தினாரா என்று பார்க்கும்பொழுது, அ.சா.1 தான் கொடுத்த அரசு தரப்பு சான்றாவணம் 1 புகாரில், தான் வண்டியை உடைக்காதே என்று சொல்லவும், "தேவுடியா மவனே, புண்டாமோனே இங்கே ஏன் போலீஸ் வண்டியை நிறுத்தியிருக்கிறாய் எடுத்துட்டு போலே" என்று சத்தம்போட்டதாக கூறியிருக்கிறார். ஆனால், சம்பவ இடத்தில் இருந்ததாக கூறியிருக்கின்ற அ.சா.1, சம்பவத்தை நேரில் பார்த்த 2 வது சாட்சி அ.சா.2, யாரும் எதிரி அ.சா.1 புகாரில் சொன்ன வார்த்தைகளை பயன்படுத்தினார் என்றோ, அதனால் பிறருக்கு தொந்தரவு தரும் வகையில் செயல்பட்டார் என்றோ சாட்சியம் அளிக்கப்படவில்லை. முக்கியமாக, அரசு தரப்பில் இ.த.ச. பிரிவு 294(பி)ன் படி,

எதிரி என்ன வார்த்தைகளை பயன்படுத்தினார் என்று அரசு தரப்பில் சாட்சியம் அளிக்கப்படாத சூழ்நிலையில், அசிங்கமாக பேசினார் என்று கூறியுள்ளதை மட்டும் வைத்து எதிரி இ.த.ச. பிரிவு 294(பி) ன் கீழ் குற்றவாளி என்று தீர்மானிக்க இயலாது. எனவே, எதிரி இ.த.ச. பிரிவு 294(பி)ன் படி குற்றவாளி இல்லை என்று முடிவு செய்யப்படுகிறது.

31. அடுத்ததாக, அரசு தரப்பில் முன் வைக்கப்பட்ட வாதமானது, எதிரி தனது வீட்டிற்கு முன்பு காவல் நிலைய வாகனம் நின்றிருந்தபோது, எதற்கு இந்த வாகனத்தை நிறுத்தியிருக்கிறாய் என்று கேட்டு, வாகனத்தின் முன் பக்கம், பின்பக்கம், மற்றும், வலது பக்க கதவு கண்ணாடிகளை உடைத்ததாக எடுத்துரைக்கப்பட்டது. வாகனத்தின் கண்ணாடி உடைத்த விபரம் 6 வது சாட்சியத்தின், சாட்சியங்களில் இருந்து தெரிய வருகிறது. அரசு தரப்பு 6 வது சாட்சி மோட்டார் வாகன ஆய்வாளர், மேற்படி TN 74 G 0529 வாகனத்தை ஆய்வு செய்த போது, கண்ணாடிகள் உடைந்து துகள்களாக இருந்ததாக சாட்சியம் அளித்திருக்கிறார். எதிரி வாகனத்தின் கண்ணாடிகளை உடைத்திருந்தால், அந்த சம்பவத்தின்போது அங்கிருந்த அ.சா.1 அல்லது அ.சா.2, தாங்கள் அங்கேயே இருந்தோம் என்று கூறியுள்ளதுபடி அவர்கள் எதிரியை பிடித்திருப்பார்கள் அல்லது எதிரி பயன்படுத்திய அருவாளையாவது கைப்பற்றி இருப்பார்கள். ஆனால் அவர்கள் அதை கைப்பற்றவில்லை. எதிரியை கைது செய்யவும் இல்லை. சேதப்படுத்தப்பட்ட கண்ணாடி துகள்களும் சேகரித்து நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்படவில்லை. அப்படி இருக்கும்போது

எதிரிதான் கண்ணாடிகளை சேதப்படுத்தினாரா என்று பார்க்கும்பொழுது, அதிகாலை 12.30 மணியளவில் வாகனத்தை நிறுத்தியிருந்த போது, எதிரி அருவாளால் வந்து கண்ணாடியை வெட்டினார் என்று அ.சா.1 சாட்சியம் அளித்துவிட்டு, தனது குறுக்கு விசாரணையில் கத்தியால் கண்ணாடிகளை வெட்டினார் என்று சாட்சியம் அளித்திருக்கிறார். அவர், தான் சம்பவத்தின்போது அங்கு இருந்ததாக, அ.சா.1, 2 மற்றும் 3 சாட்சிகளிலிருந்து தெரிய வருகிறது. சம்பவத்தை நேரில் பார்த்த சாட்சியே தன்னுடைய குறுகடு விசாரணையில் கத்திக்கொண்டு கண்ணாடியை வெட்டினார் என்று சாட்சியம் அளித்திருக்கிறார். மேலும் சம்பவத்தின்போது தான் மட்டும்தான் இருந்ததாக சாட்சியம் அளித்திருக்கிறார். ஆனால், அ.சா.1 மற்றும் 2, எதிரி கண்ணாடியை உடைக்கும்போது இருந்ததாக அ.சா.2 சாட்சியமளித்துள்ளார். மேற்படி சூழ்நிலையில், அ.சா.1 தன்னுடைய சாட்சியத்தில், தான் வாகன ஓட்டுநர் என்பதால், தானும், காவல் நிலைய ஆய்வாளருமாகிய அ.சா.8, ரோந்துபணியில் வாகனத்தில் இருந்ததாக சாட்சியம் அளித்திருக்கிறார். ஆனால் அ.சா.8 ஆக விசாரிக்கப்பட்ட ஆய்வாளர் தான் தனியாக காரில் சென்றதாக சாட்சியமளித்திருக்கிறார். மேற்படி அ.சா.1, 2 மற்றும் 8, சாட்சியங்களிலிருந்து சம்பவ இடத்திற்கு மூன்று சாட்சிகளும் சென்றார்களா, என்பதிலே முன்னுக்கு பின் முரணாக சாட்சியமளித்திருக்கிறார்கள். அது மட்டுமல்ல சம்பவத்தை நேரில் பார்த்தாக கூறப்படுகின்ற சாட்சியே முதல் விசாரணையில், அருவாள் கொண்டு கார் கண்ணாடியை உடைத்தார் என்று சொல்லிவிட்டு, குறுக்கு

விசாரணையில் கத்திக்கொண்டு வெட்டினார் என்று கூறியிருப்பது, எதிரிதான் கண்ணாடியை உடைத்தாரா என்பதில் சந்தேகம் எழுகிறது. அந்த சந்தேகத்தை போக்கும் வகையில், அரசு தரப்பில் சம்பவத்திற்கு பயன்படுத்தப்பட்ட அருவாளோ அல்லது வாகனத்தின் கண்ணாடி உடைக்கப்பட்டதற்கான புகைப்படமோ, கண்ணாடி துகள்களோ கைப்பற்றி முன் வைக்கப்படவில்லை. மேலும், பொதுமக்கள் இருக்கக்கூடிய இடத்தில் காவல் நிலையை வாகனத்தை ஒரு நபர் உடைத்தார் என்றால் அக்கம் பக்கத்தில் இருந்தவர்கள் பார்த்திருப்பார்கள். ஆனால் அக்கம் பக்கத்தில் இருந்தவர்கள் யாரும் இந்த வழக்கில் சாட்சியாக சேர்க்கப்படவில்லை. அதற்கு அ.சா.8 கூறியுள்ள காரணம், யாரும் சாட்சியமளிக்க முன்வரவில்லை என்று கூறியுள்ளார். தன்னுடைய விசாரணையில் தான் யாரை அழைத்தார், யார் முன்வரவில்லை என்று கூறப்படவில்லை. அப்படி இருக்கும்பொழுது, அரசு தரப்பில் சம்பவ இடத்தில் உள்ள 3–ம் தரப்பு நபர்களை விசாரிக்கவோ அல்லது சாட்சியாகவோ சேர்க்க எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பது தெரிய வருகிறது. அதற்கு காரணம், எதிரிதான் வாகனத்தை உடைத்தாரா என்று அரசு தரப்பு சாட்சிகளுக்கே சரியாக புலப்படவில்லை என்பது, அவர்களது சாட்சியங்களிலிருந்து தெரிய வருகிறது. எனவே அரசு தரப்பு சாட்சி 1, 2 மற்றும் 8 சாட்சியங்கள், அரசு தரப்பு வழக்கிற்கு எதிராக உள்ளதால், எதிரியை தமிழ்நாடு பொது சொத்துக்கள் (சேதாரம் மற்றும் இழப்பு தடுப்பு) சட்டம் பிரிவு 3(1) சட்டத்தின்படி குற்றவாளி என்று, அ.சா.8, தாக்கல் செய்துள்ள சேத மதிப்பு சான்றிதழை மட்டும் வைத்து முடிவு செய்ய

இயலாது. மேலும், மேற்படி செயல்களிலிருந்து எதிரி, காவலர்களை பணி செய்யவிடாமல் தடுத்தாரா என்பதும் ஐயம் எழுகிறது என்பதால், இ.த.ச. பிரிவு 352 மற்றும் தமிழ்நாடு பொது சொத்துக்கள் (சேதாரம் மற்றும் இழப்பு தடுப்பு) சட்டம் பிரிவு 3(1) ன் கீழ் எதிரி மீதான குற்றச்சாட்டுகள், அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமில்லை என்று நிரூபிக்கப்பட்டுள்ளதாக இந்நீதிமன்றத்திற்கு புலனாகிறது.

32. இந்நிலையில், வழக்கின் தனிநபர் சாட்சிகளான அ.சா.3, 4, மற்றும் 5 ஆகிய சாட்சிகள் பிறழ் சாட்சியாகி உள்ள நிலையில், அரசு தரப்பில் அளிக்கப்பட்டுள்ள சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள், எதிரிக்கு எதிரான குற்றச்சாட்டுகளை நிரூபிக்க போதுமான வகையில் அமையவில்லை என்றே இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

33. எனவே, இந்த வழக்கில் வழக்கு சம்பவம் நடைபெற்றது என்பதையோ வழக்கு சம்பவத்தில் எதிரிதான் ஈடுபட்டார் என்பதையோ நிரூபிக்கக் கூடிய நம்பத்தகுந்த மற்றும் போதுமான சாட்சியங்கள் இல்லை என்பதால் எதிரி மீதான குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்றே இந்த நீதிமன்றம் கருதுகிறது. எனவே இந்த வழக்கில் ஐயப்பாட்டின் ஆதாயத்தை எதிரிக்கு வழங்குவது ஏற்புடையதாகும்.

முடிவில், எதிரி, தமிழ்நாடு பொது சொத்துக்கள் (சேதாரம் மற்றும் இழப்பு தடுப்பு) சட்டம் பிரிவு 3(1) மற்றும் இ.த.ச பிரிவுகள் 294(பி) மற்றும் 352–ன் கீழ் குற்றவாளி அல்ல என முடிவு செய்து, மேற்படி குற்றச்சாட்டுகளிலிருந்து

கு.வி.மு.ச.235(1) பிரிவின் படி விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது. வழக்கு சொத்து ஏதும் உத்தரவிற்கில்லை. இவ்வழக்கில் எதிரி முன் ஜாமீன் அடிப்படையில் எழுதிக்கொடுத்த பிணை பத்திரம் ரத்து செய்யப்படுகிறது.

இத்தீர்ப்புரை என்னால் நேரடியாக சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, இன்று 2026 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 07 ஆம் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் பகரப்பட்டது.

R KARL MARX

Digitally signed by R KARL MARX
Date: 2026.07.07 16:34:12 +0530

**உதவி அமர்வு நீதிபதி**
**இரணியல்**

**இணைப்பு**

<u>அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள்</u>

அ.சா.1 – திரு. அஜித்குமார்
அ.சா.2 – திரு. மகேஷ்
அ.சா.3 – திரு. மோகன் சந்திரகுமார்
அ.சா.4 – திரு. முருகேசன்
அ.சா.5 – திரு. சிபி செபஷ்டியான்
அ.சா.6 – திரு. சசி
அ.சா.7 – திரு. சோபனராஜ்
அ.சா.8 – திரு. ஜெயசந்திரன்

<u>எதிரி  தரப்பில் சாட்சிகள் – இல்லை</u>

<u>அரசு தரப்பு சான்றாவணங்கள்</u>

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | – | புகார் மனு |
| அ.சா.ஆ.2 | – | பார்வை மகஜரில் உள்ள அ.சா.3 ன் முதலாவது கையொப்பம் |
| அ.சா.ஆ.3 | – | பார்வை மகஜரில் உள்ள அ.சா.4 ன் இரண்டாவது கையொப்பம் |
| அ.சா.ஆ.4 | – | வாகனத்தை ஆய்வு செய்ததற்கான அறிக்கை |
| அ.சா.ஆ.5 | – | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.6 | – | பார்வை மகஜர் |
| அ.சா.ஆ.7 | – | மாதிரி வரைபடம் |
| அ.சா.ஆ.8 | – | சேதமதிப்பு ரசீது |

<u>அரசு தரப்பில் சான்று பொருள்கள் :</u>

இல்லை

R KARL MARX

Digitally signed by R KARL MARX
Date: 2026.07.07 16:34:21 +0530

**உதவி அமர்வு நீதிபதி**
**இரணியல்.**

**அமர்வு நீதிமன்றம்,**

**வரைவு/சீரான தீர்ப்புரை**

**அமர்வு வழக்கு எண்.289/2023**

**நாள் – 07.07.2026**